# நாவைப் பேணுவோம்

ஏ. ஆரிப் (பட்டம் பெறும் மாணவன்)

இறைவனால் வழங்கப்பட்ட அருட்கொடைகளில் நாவு மகத்தானது. அல்லாஹ் அதைப்படைத்து, வடிவமைத்துள்ள பாங்கு அற்புதமானது. அதன் பருமன் சிறியதாக இருப்பினும் அதனால் ஏற்படும் சாதக, பாதகம் அபாரமானது. அளவிடமுடியாதது. ஒரு மனிதனை இஸ்லாம் எனும் கோட்டைக்குள் நுழைவிக்க உதவுவதோடு, அவனது தேவைகள் உள்ளுணர்வுகள், மனப் பதிவுகள், மற்றவர்களோடு அளவளாவுதல், எதிரியின் இதயத்தை இன் சொற்களால் வெற்றி கொள்ளல், நண்பர்கள் உறிவினர்களுக்கிடையிலான உறவை வளப்படுத்துதல், சத்தியத்தை அதன் அசல் வடிவில் எடுத்துரைத்தல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளில் ஈடுபட நா இன்றியமையாதது.

எனவே பயனுள்ள அம்சங்களில் அது பிரயோகிக்கப்படும் போது அவனுக்கு வெற்றியை இம்மையிலும், மறுமையிலும் பெற்றுத்த தர வல்லது. நபியவர்கள் **அர்த்தமற்ற விவாதங்கள், தவறான குதர்க்க வாதங்களை விட்டவனுக்கு இறைவன் சுவனத்தின் கீழ் பகுதியில் ஒரு வீட்டைக்கட்டுகிறான். தனது ஒழுக்கத்தரத்தை சீர்திருத்திக்கொள்பவனுக்கு சுவனத்தின் மேற்பகுதியில் ஒரு மாளிகையை அமைக்கிறான்.** என்றார்கள் (அபூதாவூத்) அதே நேரம் நாவு சறுகின்ற போது இரண்டு வகையான வடுக்களை அவனிலும் சமூகத்திலும் உண்டுபண்ணி அவனுக்கும் மற்ற மனிதர்களுக்கும் பல தீங்குகளை ஏற்படுத்தி விடுகின்றது. ஒன்று பேசுவதனால் ஏற்படுகின்ற பேராபத்துக்கள் அதாவது பொய், புறம், கோள், தற்பெருமை, மானத்தில் கைவைத்தல் அடுத்தவர்களை வார்த்தைகளால் இம்சைப்படுத்துதல் போன்ற பலவிடயங்களில் நாவை ஈடுபடுத்தி சமூக ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தல். இரண்டாவது மௌனத்தால் ஏற்படுகின்றது. அதாவது தனது மார்க்கத்தை மாற்றான் இழிந்துரைக்க சித்திரப்பாவை போல் மௌனித்து நிற்பதாகும். அல்லது அவனது வன்சொற்களுக்கு அனுமதி வழங்குவது போல் தலையசைப்பதாகும். இவ்வாறான போலிகளை இஸ்லாம் "ஊமை ஷைத்தான்கள்" என வர்ணிப்பதுடன் அவர்கள் பாவிகள் என்றும் கருதுகின்றது.

மனிதனின் இம்மை வெற்றிக்கும் மறுமையின் சுகமான வாழ்க்கைக்கும் வழிகாட்டித் தெளிவூட்டும் இஸ்லாம் "நாவடக்கம்" என்ற அறநெறிப் பாடத்தை மிகப் பவ்வியமாக மக்கள் மனதில் விதைக்கிறது. அல்-குர்ஆன் ஓர் இடத்தில் **"மனித நா அசைபோடும் அனைத்துச் சொற்களையும் கண்காணிப்பாளர் பதிவு செய்கிறார்"** (50 : 36) எனக்குறிப்பிடுகிறது. மற்றுமொரு இடத்தில் **"அறிவில்லாத விடயங்களை பின் தொடர வேண்டாம். மறுமையில் செவி, பார்வை, இதயம் இவை ஒவ்வொன்றும் விசாரணைக்குட்படத்தப்படும்** (17 : 36) எனக்கூறுகின்றது.

நபி மொழி ஒன்று **மனித நா அது ஏற்படுத்துகின்ற மோசமான வடுக்களினாலும் படிவுகளினாலும் அவனை நரகத்திற்கு செல்லவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு உள்ளாக்குகின்றது** (திர்மிதி) எனக் குறிப்பிடுகிறது. இன்னொரு நபி மொழியில் **நரகத்தின் பால் மனிதனை இட்டுச்செல்கின்றவற்றில் நாவும், மறுமஸ்தானமும் முதலிடம் வகிக்கின்றன** (திர்மிதி) எனப் பதியப்பட்டுள்ளது.

மேற்குறித்துக்காட்டிய இறைவசனங்களும், நபி மொழிகளும் மனித வாய்களுக்கு விலங்கிடுபவையாக அமைந்துள்ளதைக் காணலாம். ஏனெனில் இதய சுத்தியை வெளிப்படுத்தும் இனிய கேந்திரம் வாயிலிருந்து பீறிடும் வார்த்தைகளாகும். ஒருவன் வெளிப்படுத்தும் வார்த்தைகள் அவனது அறிவுக் கூர்மை, ஒழுக்கம் என்பவற்றை பிரதிபலித்து நிற்கின்றன. இதனால்தான் இஸ்லாம் மனிதனின் வார்த்தைகள் அவற்றைப் பயன்படுத்தும் பாங்கு, பரிமாறும் விதம், ஒழுக்க நியதிகள் என்பவற்றை மக்கள் மனதில் அழுத்தி நிற்கிறது.

எனவே நாவை ஆரோக்கியமான வழிகளில் பயன்படுத்த குர்ஆன் ஓதுதல், திக்ரு செய்தல், நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல், முரட்டுக் குணமும் பிடிவாதமும் நிறைந்தவர்களுடன் உரையாட நேர்ந்தால் பொறுமை, சகிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ளல் போன்ற அருங்குணங்களை இஸ்லாம் ஈண்டு குறிப்பிடுகிறது. ஆகவே நாம் நல்ல தரமான பேச்சைப் பேசிடும் விதத்தில் எமது நாவை இசைவாக்கிக்கொள்ள வேண்டும். அத்தோடு இஸ்லாமிய போதனைகளை பின்பற்றி நடக்க முயல்வோமாக.

## மிகக் கொடிய வட்டி

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

வட்டியின் வகைகள் 72 இருக்கின்றன. அதில் மிக எளிதானது ஒருவன் தனது தாயைத் திருமணம் செய்துகொள்வதைப் போன்றாகும். வட்டியில் மிகக் கொடியது ஒரு முஸ்லிமின் மானமாகும்.

அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத் (ரலி) ஆதாரம்: அபூதாவூத்

# தரிசி

சிறையை வாழ்நாளில் ஒரு முறை -
இறைவன் உனக்களித்த சுதந்திரத்தை அறிய
நீதிமன்றத்தை வருடத்தில் ஒரு முறை -
இறைவன் உனக்களித்த நற்குணத்தை அறிய
வைத்திய சாலையை மாதத்தில் ஒரு முறை -
இறைவன் உனக்களித்த ஆரோக்கியத்தை அறிய
பூந்தோட்டத்தை கிழமையில் ஒரு முறை -
இறைவன் தந்த இயற்கையை அறிய
வாசிகசாலையை நாளுக்கு ஒரு முறை -
இறைவன் உனக்களித்த புத்தியை அறிய
பள்ளிவாயலை நாள்தோரும் நினை
இறைவன் உனக்களித்த அருட்கொடையை அறிய